**கிராமின் கிருஷி மவுசம் சேவா**
இந்திய வானிலை துறை
தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம்
கோவை, தமிழ்நாடு

# அக்ரோமெட் ஆலோசனை புல்லட்டின்

**தேதி : 22-08-2023**

**புதுக்கோட்டை(தமிழ்நாடு) வானிலை முன்னறிவிப்பு - அன்று வெளியிடப்பட்ட :2023-08-22 ( அடுத்த 5 நாட்களில் 8:30 IST வரை செல்லுபடியாகும்)**

| வானிலை காரணி | 2023-08-23 | 2023-08-24 | 2023-08-25 | 2023-08-26 | 2023-08-27 |
|---|---|---|---|---|---|
| மழையளவு (மி.மீ ) | 3.0 | 4.0 | 0.0 | 2.0 | 2.0 |
| அதிக பட்ச வெப்பநிலை ( oசெ ) | 39.0 | 38.0 | 38.0 | 38.0 | 37.0 |
| குறைந்த பட்ச வெப்பநிலை (o செ ) | 27.0 | 26.0 | 26.0 | 25.0 | 25.0 |
| அதிக பட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 70 | 60 | 60 | 70 | 70 |
| குறைந்த பட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 30 | 30 | 30 | 30 | 40 |
| காற்றின் வேகம் (கி.மீ./மணி ) | 12 | 12 | 14 | 16 | 14 |
| காற்றின் திசை (கோணம்) | 200 | 180 | 180 | 180 | 180 |
| மேக மூட்டம் (ஆக்டா) | 7 | 6 | 4 | 7 | 6 |

## வானிலை சுருக்கம் / எச்சரிக்கை:

ஆகஸ்ட் 23 மற்றும் 24 ஆகிய தேதிகளில் லேசான மழைக்கு வாய்ப்புள்ளது . அதிகபட்ச வெப்பநிலை 37.0°C - 39.0°C எனும் வேறுபாட்டிலும், குறைந்தபட்ச வெப்ப நிலை 25.0. °C -27.0°C. வேறுபாட்டிலும் இருக்கும். வானம் அடுத்த ஐந்து நாட்களுக்கு பொதுவான மேகமூட்டத்துடன் காணப்படும். காற்றின் வேகம் மணிக்கு 12 முதல் 14 கிலோமீட்டர் வேகம் இருக்கும் என எதிர்பார்க்கலாம்.

## பொது ஆலோசனை:

விரிவாக்கப்பட்ட வரம்பு மழை முன்னறிவிப்பு : ஆகஸ்ட் 27 முதல் செப்டம்பர் 02 வரையிலான காலகட்டத்தில் தமிழ்நாடுட்டில் இயல்பானது பெய்ய வாய்ப்பு உள்ளது . அதிகபட்ச வெப்பநிலை மற்றும் குறைந்தபட்ச வெப்பநிலை இயல்பானது இருக்கும்.

## குறுஞ்செய்தி :

காய்கறிகள் விதைக்கும் பருவமாதலால் விவசாயிகள் 1 கிலோ விதையுடன் 4 கிராம் பேசில்லஸ் சப்டிலிஸ் கலந்து விதை நேர்த்தி செய்து விதைத்து நாற்றழுகல் நோய் வராமல் தவிர்க்கலாம்.

## பயிர் குறிப்பிட்ட ஆலோசனை:

| பயிர் | பயிர் குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| மக்காச்சோளம் | மக்காச்சோளம் விதைப்புக்கு தயாராகும் விவசாயிகள், மக்காசோளம் விதைநேர்த்தி செய்தல் நல்ல பயனை அளிக்கும்.ஒரு எக்டேர் விதைக்கு 20 கிலோ வீரிய ஒட்டு இரக விதைகள் அல்லது, 25 கிலோ இரக விதைகளும் தேவைப்படும். ஒரு செடிக்கும் மற்றோர் செடிக்கும் இடையே செ.மீ 20 இடைவெளியும் பாருக்கு பார் 45 செ.மீ இடைவெளியும் இருக்க வேண்டும். பூஞ்சாண விதை நேர்த்தி செய்த விதைகளை விதைப்பதற்கு முன் ஒரு எக்டேருக்கு மூன்று பாக்கெட் அசோஸ்பைரில்லம் (1600 கிராம்) கொண்டு விதை நேர்த்தி செய்ய வேண்டும். விதையை 4 செ.மீ ஆழத்தில் ஊன்ற வேண்டும். |
| நெல் | தற்போது நிலவும் பருவசூழ்நிலையில் நெற்பயிரில் கொம்புப்புழு தாக்குதல் பரவலாக காணப்படுகின்றது. இதன் புழு நெற்பயிரின் இலை விளிம்புகளை ஒழுங்கற்ற முறையில் ஓரத்திலிருந்து நுனி வரை கடித்து உண்ணும். இதன் தாக்குதலை கட்டுப்படுத்த வயலில் நீரை வடிய செய்துவிட்டு, பின் மாலை வேலைகளில் ஒரு டேங்கிற்கு 6கிராம் என்ற அளவில் இமாமெக்டின் பென்சோயேட் அல்லது ஒரு ஏக்கருக்கு 20மிலி என்ற அளவில் ப்ளுபென்டமைடு மருந்தினை தெளிக்க வேண்டும். |

## தோட்டக்கலை குறிப்பிட்ட ஆலோசனை:

| தோட்டக்கலை | தோட்டக்கலை குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| தென்னை | தற்போது நிலவும் வானிலையின் காரணமாக தென்னைந்தோப்புகளில் நீர் ஆவியாதல் அதிகமாகும். நீர் ஆவியாதலைக் குறைக்க தென்னை மரத்தின் மட்டை ஓலைகள் தென்னை நார்க்கழிவு கொண்டு மூடாக்கு போடுதல் சிறந்ததாகும். குறிப்பாக 1.8 மீட்டர் ஆரம் கொண்ட வட்டப்பாத்திகளில் குவிவட்டப்பகுதி மேல் நோக்கியவாறு 100 தென்னை மட்டைகளை அல்லது 15 காய்ந்த தென்னை ஓலைகளை அல்லது 10 செ.மீ உயரத்திற்கு தென்னை நார்க்கழிவு பரப்புவதால் மண்மற்றும் நீர் வளத்தைப் பாதுகாக்கலாம். |
| மல்லி கை | மல்லிகை பூப்பயிரில் ஆங்காங்கே ஊட்டசத்து குறைபாடு காணப்படுகிறது. மல்லிகை மலர்த் தோட்டங்களில் நன்கு மக்கிய தொழுஉரம் இடுவது நல்ல பலனைக் கொடுக்கும். நடவு செய்வதற்கு முன் குழி ஒன்றிற்கு 10கிலோ மக்கிய தொழு உரத்தினை இடவேண்டும். |
| தக்காளி | Tamil English தக்காளி பயிரில் இலை சுருட்டை நோய் தாக்குதல் பரவலாக தென்படுகின்றது. நோய் தாக்குதலின் அறிகுறியாக புதிதாக வளரும் தக்காளி செடியில் மஞ்சள் நிறத்தில் இலைகள் சுருண்டு காணப்படும். தாவரத்தின் வளர்ச்சி குறைந்துவிடும். புதிய இலைகளின் அளவு குறைந்து சுருங்கி, நரம்புகள் மஞ்சள் நிறத்தில் மாறியும் காணப்படும். இலைகள் மேல் நோக்கி சுருண்டு பார்ப்பதற்கு கிண்ணம் போல் இருக்கும். மலர்கள் தோன்றும் ஆனால் காய் பிடிப்பிற்கு முன் உதிர்ந்துவிடும். இதனைக் கட்டுப்படுத்த 10 லிட்டர் தண்ணீரணீக்கு 250 மில்லி நன்கு புளித்த மோர்,., மற்றும் 2 முட்டையின் வெள்ளைக்கரு என்ற விகித்தில் நன்கு கலந்து தெளிக்கவும். |

| தோட்டக்கலை | தோட்டக்கலை குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| வாழை | வாழை பயிரில் தேமல் வைரஸ் நோய் தாக்குதல் பரவலாக தென்படுகிறது . நோய் தாக்குதலின் அறிகுறியானது பசுமையான இலைகள் வெளிரிய கோடுகளுடனும் இலைகள் சிதைந்தும் காணப்படும் மேலும் பழங்களிலும் வெளிரிய கோடுகளும் சிதைவும் காணப்படும் .இதனைக் கட்டுப்படுத்த 40 கிராம் டிரைக்கோடெர்மா விரிடி உடன் 10 மில்லி ஒட்டுப் பசை கலந்து தெளிக்கவும் . |
| கத்திரிக்காய் | தற்போதைய சூழ்நிலையில் கத்தரியில் வளர்ச்சி ஊக்கி தெளிப்பது நல்ல பலனை அளிக்கும். கத்தரியில் 1மில்லி ட்ரைக்கோன்டனால் (2 பிபிஎம்) மற்றும் சோடியம் போரேட் அல்லது 35 மில்லி கிராம் போராக்ஸ்ஆகியவற்றை ஒரு லிட்டர் நீருடன் கலந்து நாற்று நட்ட 15 நாட்கள் கழித்து ஒரு முறையும், பிறகு பூக்கள் தோன்றும் பருவத்தில் ஒருமுறையும் தெளிப்பதன் மூலம் மகசூலை அதிகரிக்கலாம். |

## உயிருள்ள விலங்குகள் குறிப்பிட்ட ஆலோசனை:

| உயிருள்ள விலங்குகள் | உயிருள்ள விலங்குகள் குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| பசு | கால்நடை வளர்ப்போர் பகல் நேரங்களில் 30-60 நிமிட இடைவெளியில் 1 முதல் 5 நிமிடங்களுக்கு விலங்குகளின் உடலில் நேரடியாக தண்ணீரை தெளிப்பதன் மூலம் வெப்ப அழுத்தத்தில் இருந்து விலங்குகளை பாதுகாக்கலாம். மாட்டு கொட்டகையின் பக்கவாட்டில் (ஓரங்களில்) ஈரமான சணல் சாக்குபைகளை கட்டி விடவும். தாதுக்களுக்கான அதிகரித்த தேவையைப் பூர்த்தி செய்வதற்காக வெப்பமான காலநிலையின் போது விலங்குகளுக்கு அதிகரித்த தாது உப்புச் சேர்க்கையை உறுதி செய்யவும். கால்நடைகளுக்கு குறிப்பாக பொட்டாசியம் நிறைந்த தாதுக்கலவையினை வழங்குவதில் முன்னுரிமை அளிக்க வேண்டும். |

## கோழிப்பண்ணை குறிப்பிட்ட ஆலோசனை:

| கோழிப்பண்ணை | கோழிப்பண்ணை குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| கோழி | பகல் நேரங்களில் வெப்பம் அதிகமாக இருந்தால் கோழி பண்ணைகளில் தீவன தொட்டியை காலை 10 மணி முதல் மலை 5 மணி வரை உயர்த்திவைப்பதால் வெப்பத்தாக்கத்தை குறைக்கலாம் . மேலும் குடிநீரில் தாது உப்புக்கள் மற்றும் B காம்ளகஸ் வைட்டமின் கலப்பதால் வெப்ப அயற்சி இருந்து பாதுகாக்கலாம் . கோடை காலத்தில் கால்நடைகளுக்கு ஒட்டுண்ணி தாக்கம் ஏற்படக்கூடும் இவற்றை கட்டுப்படுத்த 3 மில்லி பூடாக்ஸ் மருந்துனை 1 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்கவும். |

## பிற ( மண்/ நில தயாரிப்பு) குறிப்பிட்ட ஆலோசனை:

| பிற ( மண்/ நில தயாரிப்பு) | பிற ( மண்/ நில தயாரிப்பு) குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| பொது ஆலோசனை | பூந்தோட்டங்களில் அதிக வெப்பத்தினால் ஏற்படும் தாக்கத்தை குறைக்க பயிர் மூடாக்கு செய்யலாம்.மேலும் இலைப்பேன் மற்றும் அசுவினி தாக்குதல் அதிகமாக வாய்ப்பு உள்ளது.எனவே இதை கண்காணித்து 5% வேப்ப எண்ணெய் கொட்டை வடி கரைசலை தெளிக்கவும். |